Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

Multiple Choice Question

1.பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை
(a) சொத்தும் நலமும் (b) உற்பத்தியும் நுகர்வும் (c) தேவையும் அளிப்பும் (d) நுண்ணியலும் பேரியலும்

2."மேக்ரோ" (Macro) என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் யார்?
(a) ஆடம்ஸ்மித் (b) ஜே.எம்.கீன்ஸ் (c) ராக்னர் பிரிஷ் (d) காரல் மார்க்ஸ்

3."புதிய பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?
(a) ஆடம்ஸ்மித் (b) ஜே.எம். கீன்சு (c) ஜே.எம்.கீன்ஸ் (d) காரல் மார்க்ஸ்

4.பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?
(a) விலை கோட்பாடு (b) வருவாய் கோட்பாடு (c) அங்காடி கோட்பாடு (d) நுண்ணியல் கோட்பாடு

5.பேரியல் பொருளாதாரம் ஆய்வது
(a) தனி நபர்கள் (b) நிறுவனங்களை (c) நாடு (d) ஒட்டுமொத்தங்களை

6.ஜே.எம்.கீன்சின் பங்களிப்பைக் குறிப்பிடுக.
(a) நாடுகளின் செல்வம் (b) பொதுக் கோட்பாடு (c) மூலதனம் (d) பொது நிதி

7.பொது மட்டத்தில் விலையின் தொடர் உயர்வைக் குறிப்பிடும் கருத்து _____ ஆகும்.
(a) மொத்த விலைக் குறியீடு (b) வாணிகச் சுழல் (c) பண வீக்கம் (d) தேசிய வருவாய்

8.பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.
(a) அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பது (b) தடைகளை முறியடிப்பது (c) வளர்ச்சியை அடைவது (d) மேலே கூறப்பட்ட அனைத்தும்

9.ஒரு பொருளாதாரத்தின் அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
(a) உற்பத்தி மற்றும் பகிர்வும் (b) உற்பத்தி மற்றும் பரிமாற்றம் (c) உற்பத்தியும் நுகர்வும் (d) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை

10.ஒரு பொருளாதாரத்தில் காணப்படுவது
(a) நுகர்வு துறை (b) அரசு துறை (c) அரசு துறை (d) மேலே கூறப்பட்ட அனைத்தும்

11.எந்த பொருளாதாரத்தில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?
(a) முதலாளித்துவப் பொருளாதாரம் (b) சமத்துவ அமைப்பு (c) சமத்துவ அமைப்பு (d) கலப்புப் பொருளாதார அமைப்பு

12.பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு _____ ஆகும்
(a) முதலாளித்துவ அமைப்பு (b) உலகமயத்துவ அமைப்பு (c) கலப்புப் பொருளாதாரம் அமைப்பு (d) சமதருமப் பொருளாதாரம்

13.முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
(a) ஆடம்ஸ்மித் (b) காரல் மார்க்ஸ் (c) தக்கேரி (d) ஜே.எம்.கீன்ஸ்

14.முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு _____ ஆகும்.
(a) ரஷ்யா (b) அமெரிக்கா (c) இந்தியா (d) சீனா

15.சமதருமக் கொள்கையின் தந்தை எனப்படுபவர் யார்?
(a) ஜே.எம்.கீன்ஸ் (b) காரல் மார்க்ஸ் (c) ஆடம்ஸ்மித் (d) சாமுவேல்சன்

16.தனியாரும், அரசும் சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பைக் குறிப்பிடும் பதம் _____ஆகும்.
(a) முதலாளித்துவ பொருளாதாரம் (b) சமத்துவ பொருளாதாரம் (c) உலகமயத்துவ பொருளாதாரம் (d) கலப்புப் பொருளாதாரம்

17.இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளைக் குறிப்பிடுக.
(a) குடும்பங்களும் நிறுவனங்களும் (b) தனியார் மற்றும் பொதுத்துறை (c) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத்துறைகள் (d) நிறுவனங்களும் அரசும்

18.திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் சுழல் ஓட்ட மாதிரி என்பது _____ ஆகும்
(a) இரு துறை மாதிரி (b) முத்துறை மாதிரி (c) நான்கு துறை மாதிரி (d) மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

19.ஒரு குறிப்பிட்ட காலத்தில் (point of time) குவிந்த சரக்குகளின் அளவைக் குறிப்பிடும் பதம்_____ ஆகும்.
(a) உற்பத்தி (b) இருப்பு (c) மாறிலி (d) ஓட்டம்

20.கீழ்வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறிலியைக் கண்டுபிடி.
(a) பண அளிப்பு (b) சொத்துக்கள் (c) வருமானம் (d) வெளிநாட்டுச் செலவாணி இருப்பு